### பல்லாவரம் தொகுதி – பம்மல் – அனகாபுத்தூர் – குன்றத்தூர் பகுதிகளில்

# போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க 4 வழிச்சாலைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா?

## சட்டப் பேரவையில் பல்லாவரம் இ.கருணாநிதி கேள்வி!



சென்னை, ஜன.25-

பேரவையில் இ. கருணாநிதி பேசியதாவது: பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் தொகுதி, பம்மல்அனகாபுத்தூர்குன்றத்தூர் சாலை அகலப்படுத்துகின்ற பணிக்காக கடந்தாண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு சென்றிருக்கிறார்கள். ஆக, அந்தத் துறையின் அமைச்சர், அதிகாரிகளோடு பார்வையிட்ட பிறகு அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, இந்த தடவையாவது தாங்கள் மனது வைத்து, இந்த அரசு அந்த போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க 4 வழிச் சாலைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, ராதா 4 நகர் பகுதியில் UNDERPASS அமைத்தது பற்றி ஏதோ நன்றி சொல்வார் என்பதற்காக உறுப்பினர் கருணாநிதி அவர்கள் எழுந்திருக்கிறார் என்று பார்த்தேன். ஏனென்றால், அது ரொம்ப நாள் கிடப்பில் இருந்தது. அதை இந்த ஆட்சி வந்தவுடன்தான் செய்து முடித்தோம். இப்போது அவர் சொல்கிற அந்த வழிச் சாலை பல்லாவரத்திலிருந்து குன்றத்தூர் செல்கிற சாலை அந்த சாலை. அதை நேரடியாகவே ஏற்கெனவே நம்முடைய அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களும் இது சம்பந்தமாக என்னிடத்தில் பல முறை வலியுறுத்தி இருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் சென்ற 6 மாதங்களுக்கு முன்னால், உறுப்பினர் கருணாநிதி, அதே போன்று, அமைச்சர் தா.மோ. அன்பரசன் அந்தச் சாலையை நாங்கள் நேரடியாக ஆய்வு செய்தோம். அதில் இப்போது முதலமைச்சர் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் முதற்கட்டமாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எஞ்சியிருக்கிற 1% கிலோ மீட்டர்கூட இந்த நிதியாண்டிலேயே செய்வதற்கு வேண்டிய நிதிகள் ஒதுக்கப்பட்டு அந்த பணிகளில் ஈடுபட்டிருக்கிறோம். அதை முழுமையாக முடிக்க வேண்டுமென்று சொன்னால், அடுத்த நிதியாண்டில்தாண் பணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பெற்று முடிக்க முடியும். அதனால், இரண்டு கட்டங்களை இந்த நிதியாண்டிலே முடித்துவிடுகிறோம். மூன்றாவது கட்டம், அடுத்த நிதியாண்டிலே கட்டாயம் செய்து தரப்படும்.

இவ்வாறு அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்.

---

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் G.செல்வராஜ், தலைமையில் 27.01.2026 - செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப் பட உள்ளது. எனவே தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச்செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள் மற்றும் மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : 1. பிப்ரவரி 1 முதல் மார்ச் 8 வரை ஒவ்வொரு வாக்குச்சாவடி தோறும் தேர்வு செய்யப்படும் மகளிரை கொண்டு அரசின் சாதனைகளை பரப்புரை செய்தல்.

2. பிப்ரவரி 1 முதல் 28 வரை சட்டபேரவை தொகுதி வாரியாக தெருமுனை கூட்டங்கள் நடத்துவது

3. பிப்ரவரி 21 அன்று மதுரையில் BLA2, BLC மற்றும் BDA ஆகியோர் பங்குபெறும் பயிற்சி மாநாட்டில் கலந்து கொள்வது.

4. மார்ச் 8 அன்று திருச்சியில் நடைபெற உள்ள கழக மாநில மாநாட்டில் கலந்துகொள்வது மற்றும் கழக ஆக்கப்பணிகள்

**திருமதி.பி.கீதாஜீவன்**
மாவட்டச் செயலாளர் – தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்

---

### தேனி தெற்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில்

# மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் பொதுக்கூட்டம்!

### தாயகம் கவி எம்.எல்.ஏ. சிறப்புரை! நே.பிரகாஷ் தலைமை!

சென்னை,ஜன.25-

தேனி தெற்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று 25.1.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு

பார்க்திடல், கம்பத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் நே.பிரகாஷ் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் கழக துணை அமைப்புச் செயலாளர், திரு. வி.க. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி, தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் மாணவரணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாணவர் அணி அமைப்பாளர் கம்பம் வடக்கு, தெற்கு நகரம் பி.பிரதிப், ரா.தெய்வக்குமார் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

---

# சென்னை தெற்கு மாவட்டம்,

## மதுரவாயல் தெற்குப் பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜன.25-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் காரம்பாக்கத்தில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் இன்று (25.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் பகுதி கழக அவைத் தலைவர் P.M.செல்வராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

ஆகவே, இக்கூட்டத்திற்கு மதுரவாயல் தெற்குப் பகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொருள் :

1.25.1.26 அன்று மாலை சைதாப்பேட்டையில் நடைபெறவுள்ள மொழிப்போர் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம்.

2.பிப்ரவரி 11 ல் BLA2, BDA, BLC மண்டல கூட்டம்.

4. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் காரப்பாக்கம் க. கணபதி தெரிவித்துள்ளார்.

---

### த.பத்மநாபன் – டாக்டர் ஜனனி இளங்கோவன் தலைமை! நந்தனம் கி,மதி எம்,சி, எஸ்,முரளி முன்னிலை

# மொழிப்போர் தியாகி க.இளமதி வீரவணக்கநாள் நிகழ்ச்சி!

### டாக்டர் கனிமொழி சோமு- ஜெ.கருணாநிதி டாக்டர் எழிலன் கே, ஏழுமலை பழ செல்வகுமார் கோவி லெனின் பங்கேற்பு!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. மாணவ – மாணவிகளுக்கு நலதிட்ட உதவிகளை வழங்குகிறார்!

சென்னை, ஜன. 25-

இந்தி மொழி திணிப்பு எதிர்ப்பு போரில் ஈடுபட்டு, அன்னை தமிழ்மொழி காக்க, தமிழ் மொழிக்காக தியாகம் செய்த, மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் நிகழ்ச்சி, சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட கழகத்தில் கழக சுற்றுச்சூழல் மருத்துவ அணி மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி சார்பில், சென்னை தென்மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் மாவட்ட துணை அமைப்பாளர் WEFAS த பத்மநாபன், மருத்துவ அணி மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி அமைப்பாளர் டாக்டர் ஜனனி இளங்கோவன் ஆகியோரின் தலைமையில், மயிலை மேற்குப் பகுதி செயலாளர் மற்றும் 121 வது மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி மதி எம் சி, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ் முரளி, 123 வது வட்டக் கழகச் செயலாளர் மு இ ஏழுமலை ஆகியோரின் முன்னிலையில், இன்று 25.01.2026

ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில், சென்னை 18, வன்னிய தேனாம்பேட்டை, திருவள்ளவர் சாலை, வன்னியபுரத்தில், ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட திமுக, முன்னாள் 88 வது வட்டச் செயலாளர், திராவிட இயக்க தீரர், மொழிப்போர் தியாகி க. இளமதி (1924-1975) அவர்களின் திருவுருவ படத்திற்கு,

மலர் பூக்கள் தூவி வீரவணக்கம் செலுத்தி, மொழிப்போர் தியாகிகள் தினத்தை, தமிழ் மொழி தியாகிகள் தினமாக அறிவித்த, கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கும், இளந்தலைவர் தமிழகத் துணை அவர்களுக்கும் நன்றி அறிவிப்பும், 100 பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, திராவிட இயக்கத்தின் நேற்றைய செய்தி, இன்றைய வரலாற்று கருத்தியல் பரப்புரையை மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மயிலை த வேலு எம்.எல்.ஏ. உரையாற்றுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடு: மொழிப்போர் தியாகி க. இளமதி / பட்டம்மாள் குடும்பத்தினர், கிருஷ்ணவேணி தட்சிணாமூர்த்தி, த. புகழேந்தி குமார், த. இளங்கோவன், த. வசுமதி சிவா, WEFAS த. பத்மநாபன், DR. ஜனனி இளங்கோவன், S. ஷக்தி லாவண்யா, ஹரிஹரன் இளங்கோவன் 123 வட்ட திமுக. மயிலை மேற்கு பகுதி

---

# புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா - புதிய வழிமுறைகள்!

## தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, ஜன.25

தொல்காப்பிய பூங்கா தொடர்பாக 21.1.2026 அன்று நாளிதழில் வெளியான செய்திக்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் அளிக்கப்படும் விளக்கம் பின்வருமாறு:-

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் புதுப்பிக்கப்பட்டுள்ள தொல்காப்பிய பூங்கா 24.10.2025 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்படி அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைகள்படி, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு குறிப்பிட்ட அளவிலான பார்வையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். அதனால் தற்போது ஓர் அமர்விற்கு 250 பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்.

தொல்காப்பியப் பூங்காவில் பொதுமக்கள் நடைப்பயிற்சிக்காக காலை 6.30 மணி முதல் 8.00 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையும் 365 நாள்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்விக்காக கல்வி நிறுவனங்கள் மூலம் மாணவ, மாணவியர் திங்கள்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை (வியாழக்கிழமை மற்றும் பொது விடு முறை நாள்கள் நீங்கலாக)

காலை 9:30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை அனுமதிக்கப்படுகிறார்கள். பொதுமக்களுக்கான வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணம் திங்கள்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை (வியாழக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாள்கள் தவிர) பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை அனுமதிக்கப்படுகிறது.

சீரமைப்பிற்குப் பிறகு நடைப்பயிற்சிக்காக அனுமதி பெற்றவர்கள் நீங்கலாக 24.10.2025 முதல் இன்றுவரை 6,843 மாணவ, மாணவியரும் 20,233 பொதுமக்களும் பூங்காவைப் பார்வையிட்டு மகிழ்ந்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு, மேற்கொண்ட இச்சுற்றுச்சூழல் சீரமைப்பின் விளைவாக அடையாறு சிற்றோடை மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் அண்மையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, 549 வகையான உயிரினங்கள் இப்பூங்காவில் உள்ளன. சீரமைப்பிற்கு முன்பு 2011ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 141-ஆக மட்டுமே இருந்தது. தற்போது, தொல்காப்பியப் பூங்கா நகர்ப்புர ஈரநில உயிரிப் பல்வகைமையின் வாழ்விடமாகத் திகழ்கிறது. சீரமைப்பிற்கு முன்பு பூங்காவில் நடைப்பயிற்சிக்கு 1.95 கி.மீ. தூரம் இருந்தது.

தற்போது சீரமைப்புக்குப் பின் கூடுதலாக 1.25 கி.மீ வசதி ஏற்படுத்தப்பட்டு, மொத்தம் 3.20 கி.மீ நடைப்பயிற்சிக்கு தற்போது காலை மற்றும் மாலை இருவேளைகளில் அனுமதிக்கப்படும் பொதுமக்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட அளவை எட்டி உள்ளதால், புதியவர்களுக்கு அனுமதி வழங்க இயலாத நிலை உள்ளது. ஆனால் 2.30 மணி முதல் 4.30 மணி வரை அனைத்துத் தரப்பினருக்கும் இப்போதும் அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த அனுமதி பெறுவதற்கு பொதுமக்களுக்குத் தடையேதுமில்லை. எனினும் நடைப்பயிற்சி மேற்கொள்ளுவதற்காக, கோரிக்கைகள் அதிகமாக உள்ளதால் கூடுதல் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தற்போது 500 என்ற எண்ணிக்கையில் உள்ள நடைப்பயிற்சி அனுமதியை 1.2.2026 முதல் 3000 என்ற எண்ணிக்கையில் உயர்த்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நடைப்பயிற்சி அடையாள அட்டை மூன்று வண்ணங்களில் வழங்கப்படும். ஒவ்வொரு வண்ண அடையாள அட்டை பெற்ற பயனாளிகளும் வாரத்தில் மூன்றுமுறை வந்து நடைப்பயிற்சி மேற்கொள்ளலாம். அதற்கான நடைப்பயிற்சி அடையாள அட்டை பெறுவதற்கான திருத்திய கட்டணமாக ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.500/- என்று இருப்பது தற்போது ரூ.250/- ஆகவும், 3 மாதங்களுக்கு ரூ.1500/- என்று இருப்பது ரூ.750/- ஆகவும், 6 மாதங்களுக்கு ரூ.2500/- என்று இருப்பது ரூ.1250/- ஆகவும், 12 மாதங்களுக்கு ரூ.5000/- என்று இருப்பது ரூ.2500/ ஆகவும் குறைத்து நிர்ணயிக்கப்படும்.

ஒவ்வொரு அமர்விலும் 300 பார்வையாளர்கள் மட்டுமே பூங்காவினுள் இருக்கும் வகையில் முறைப்படுத்தப்படுவார்கள்.

---

### ரா.பிரித்திவிராஜ் – சி.கிஷோர்குமார் – கலை தினகரன் தலைமையில்

# 122 அ வட்ட இளைஞர் அணி சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! உணவு வழங்கல்!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – நந்தனம் கி.மதி – ராஜா அன்பழகன் பங்கேற்பு!

சென்னை, ஜன. 25-

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு 122 அ வட்ட இளைஞர் அணி சார்பில் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி 122 அ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ரா.பிரித்திவிராஜ் - சி.கிஷோர்குமார் தலைமையில் பைக்ராப்ஸ் நகர் செனடாப் சாலையிலும் மற்றும் வட்டத்துணை அமைப்பாளர் கலை தினகரன் தலைமையில் கணேசபுரம் தேனாம்பேட்டை என்ற முகவரியிலும் இன்று (25.01.2026 - ஞாயிற்றுகிழமை) காலை 10 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. மாவட்ட அமைப்பாளர் இளைஞர் அணி ராஜா அன்பழகன் ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் 122 அ வட்டச் செயலாளர் அ.நாகராஜன், மாவட்ட துணை அமைப்பாளர் இளைஞர் அணி தினேஷ் மாணிக்கம், பகுதி அமைப்பாளர் இளைஞர் அணி சீ.வி.திவான்குமார், ஹென்றி துரை, அருண்வாசி. சந்திரன், சித்ரா. கிருஷ்ணவேணி, ரூபாவதி, மு. மணிகண்டன் விஜய், ஆ.தயாநிதி, தி.கலைதினகரன், கௌசிக், ராஜேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

---

### மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் !முதல்வர் வருகை !

# சென்னை வடக்கு மாவட்ட அயலக அணியினர் பெருமளவில் பங்கேற்பீர்!

### மாவட்ட அமைப்பாளர் ஏ.டி.மணி அறிக்கை !

சென்னை, ஜன.25

சென்னை வடக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஏ.டி.மணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னை வடக்கு மாவட்டத்திற்கு தமிழ்நாடு முதல்வர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோர் இன்று (25.01.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணியளவில் மூலக்கொத்தளம் மயானத்தில் மொழிப்போர் தியாகிகள் தாளமுத்து நடராஜன், டாக்டர் தர்மாம்பாள், ஆகியோரின் நினைவிடத்திற்கு மலர் அஞ்சலி செலுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காலை 8.00 மணியளவில் அஞ்சலி செலுத்த வருகை தருகிறார்கள்.

மேலும் நமது வடக்கு மாவட்டத்தின் அதன் பின்பு திருவொற்றியூரில் நடைபெறும் மொழிப்போர் தியாகிகளின் வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்திற்கு இந்த இரண்டு நிகழ்ச்சிக்கும் மாவட்டத்தின் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர், செயல்வீரர் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை வடக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஏ.டி. மணி அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்குகிறார்!

# சைதாப்பேட்டை தொகுதி வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி – இரா. துரைராஜ் அறிவிப்பு!

சென்னை, ஜன.25-

சென்னை தெற்கு மாவட்டம் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் இன்று (25.01.2026) ஞாயிறு, நண்பகல் 12:00 மணி அளவில் சைதை பஜார் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது. எனவே இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சைதை மேற்கு கிழக்கு பகுதிகளுக்குட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்டக்கழக செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் தெரிவித்துள்ளனர்.

---

### கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் உரையாற்றுகிறார்!

# சென்னை தெற்கில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பா.அருண்குமார் வேண்டுகோள்!

சென்னை, ஜன. 25-

கழக பொதுச்செயலாளரும் - நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் இன்று (25/01/2026) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இடம் சைதை தேரடி திடலில் , சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில் வீரவணக்க நாள் உரை நிகழ்த்த உள்ளதால் சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அமைப்பாளர்கள், ஒன்றிய துணை அமைப்பாளர்கள், தமிழ் மாணவர் மன்ற தோழர்கள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாக பங்கேற்று தீந்தமிழ் மொழி காக்க தங்கள் தேக்குமரத் தேகத்தை தீயின் நாக்குகளுக்கு இரையாக்கிய அத்தகைய வீரர்களின் நினைவுகளைப் போற்றுவதுடன் அடுத்து வரும் இளைய சமுதாயத்தினற்கும் கொண்டு சேர்க்கும் வகையில் கழகத்தின் சார்பில் நடைபெறும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

---

### தி.மு.க. தொண்டர் அணி

# சென்னை தெற்கு மாவட்ட தலைவர் நியமனம்!

### தொண்டர் அணிச் செயலாளர் பெ. சேகர் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் -ஒப்புதலோடு மதுரை மாநகர் மாவட்ட தொகுதி மறுசீரமைக்கப்பட்டதால், ஏற்கனவே மதுரை மாநகர் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டஜீ.முத்துகிருஷ்ணன்அவர்கள்மறைவெய்தியதாலும், மற்றும் **எம். ஜெகநாதன்,** பி. முனீஸ்வரன், ஆர். ஜெயசந்திரன், டி. முரளிதரன் ஆகியோருக்கு பதிலாக, எம். நாகேந்திரன் (41, ஜி.ஜி. ரோடு, சுந்தராஜபுரம், மதுரை), **கே.பாஸ்கரன்** (8, மகபூப்பாளையம், அன்சாரிநகர், மதுரை), எஸ்.இப்ராகிம் (1, பள்ளிவாசல்தெரு, கோரிப்பாளையம், மதுரை 2), **எம். கார்த்திக்** (23, அய்யனார் கோவில் தெரு, செல்லூர், மதுரை), **இ. ஜெயராமன்** (தியாகி பாலு தெரு, மதுரை 2) ஆகியோர் மதுரை மாநகர் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 24-01-2026.

**மாஸ்டர் பெ.சேகர்,**
செயலாளர்
தி.மு.க. தொண்டர் அணி

---

# 61 வது நினைவு தினம்

தோற்றம் 27.12.1931



மறைவு 27.01.1965

விருகம்பாக்கம்

# ஒய். அரங்கநாதன்

1965 ஆம் ஆண்டு மொழிப்போர் உயிர்த் தியாகி

என்றென்றும் நீங்காத நினைவுகளுடன்...

அர.அமுதவாணன்
திருமதி. மஞ்சுளாதேவி அமுதவாணன்
அர.அன்பழகன்
திருமதி. மாலதி அன்பழகன்
அர. இரவிச்சந்திரன்.B.A.B.L.,
திருமதி. மாலதி இரவிச்சந்திரன் B.Sc.,

................பேரப்பிள்ளைகள்................

அ.அகல்யாவினோத்குமார்.B.E., அ.தேனருவிராஜாபிரதீப்.B.E.M.B.A., அ.அன்பரசன்.B.Sc., அ.கோமதி.M.B.B.S., இர.பூங்குழலி.M.B.B.S.,

**அர.அ.எழில்வாணன்**
தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி
சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர்நகர் வடக்கு பகுதி